

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கு இணங்க தமிழ்நாடு முழுவதும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 09.09.2024 அன்று நடைபெற்றது.மதுரை மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி துவக்கி வைத்தார்கள். அதன்படி நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று 669 பயனாளிகளுக்கு ரூபாய் 54.28 கோடி மதிப்பில் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மு.அப்துல்வகாப் மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மகளிர் திட்ட இயக்குனர் இலக்குவன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், 9 புதிய நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர்கள் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்கள் .

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில்

# தென்காசி - சுரண்டையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

தென்காசி, செப். 11 - தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் 08.09. 2024 -ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் சுரண்டை கலைஞர் நினைவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம், மாவட்ட துணை செயலாளர் கென்னடி,மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.செல்லதுரை, எஸ்.கே.முத்துப்பாண்டி, ஜேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், ராஜேஸ்வரன்,சமுத்திர பாண்டியன், கதிர்வேல்முருகன், சாமிதுரை,தமிழ்ச்செல்வி,ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது.மாவட்ட துணை செயலாளர் க.கனிமொழி வரவேற்புரையாற்றினார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேக்தாவுது தொடக்க உரை ஆற்றினார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி பங்கேற்று 32 மகளிர் அணி நிர்வாகி கள் உட்பட 117 கழக நிர்வாகிகளுக்கு கேடயம்,பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி பேசியதாவது.

இந்த நிகழ்ச்சி மனநிறைவு தருகிறது. தொண்டர்களை மதித்து நடக்கக் கூடிய விழாவாக இருக்கிறது மிகவும் சந்தோஷம். இதுபோன்ற தொண்டர்களை உற்சாகப்படுத்துவது, அவர்கள் பணியாற்றியதை பாராட்டுவது,இது தொன்று தொட்டு பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து வரக்கூடியதாகும். 1960 ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கழக பொருளாளர் ஆனார்கள். அதற்கு முன்பாக 10 வது இடத்தில் இருந்தார்கள் அப்போது மாநகராட்சி தேர்தல் நடைபெற்றது. சென்னை.கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்றுக்கு. இதில் சென்னையில் நாம் போட்டியிட வேண்டும் என்று கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவிடம் கூறினார்கள்.

எப்படியும் நாம் மாநகராட்சியை கைப்பற்றி விடலாம் என்று கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். சாதாரண தொண்டர்களை வேட்பாளராக நிறுத்தி 90 இடங்களில் போட்டியிட்டனர். அப்போதும் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்,இங்கு பெரிய பெரிய பணக்காரர்கள் தான் உறுப்பினராக வர முடியும் என்றார்கள். போட்டியில் வெற்றி பெற்றால் உங்களுக்கு மோதிரம் தருகிறேன் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்கள். ஆனால் 45 இடங்களை கலைஞர் அவர்களின் உழைப்பால் கைப்பற்றினார்கள்.பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைஞர் அவர்களுக்கு கணையாழியை அணிவித்தார். தொண்டர்களை மதித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு தான் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம்.

உழைத்த தொண்டர்கள் அடுத்து பணியாற்றுவதற்கு ஏதுவாக அமையும் தி.மு.க தொடர்ந்து செய்யக் கூடியது பாரம்பரியமானதாகும்.ஒன்றியத்தில் இடம் பெற்றுள்ளவர்கள் கிளைச் செயளார்களை கௌரவிக்க வேண்டும். கிளைச் செயலாளர்கள் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்தி கௌரவப்படுத்த வேண்டும்.

கழகத் தலைவர் அவர்களின் சாதனையால் மகளிர்க்கு கொடுத்த ரூபாய் 1000ம் விளைவாக கணிசமான வாக்குகள் போட்டது தாய்மார்கள் தான்.

இங்கு உழைத்த தொண்டர்களுக்கு கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றத்தில் உள்ள நிர்வாகிகள் பொதுமக்களை தொடர்பு கொண்டு முடிந்த அளவுக்கு உங்கள் பணிகளை செய்ய வேண்டும். மக்களை அரவணைத்து செல்ல வேண்டும். புதுப்புது எதிரிகள் வருவார்கள் அதை பற்றி கவலையில்லை.

அமெரிக்காவில் உள்ள நம் தலைவர் அவர்கள் பற்றி தேவையில்லாமல் சிலர் பேசி வருகிறார்கள். கலைஞர் அவர்கள் சிறையில் இருந்த போது 21 தொண்டர்கள் தீக்குளித்தனர். அப்படிப்பட்ட தொண்டர்களை பெற்ற இயக்கம் தான் இது.எதிரிகள் எவரும் எங்கள் முன்னால் நிற்க முடியாது.

மக்களவை தேர்தலில் 400 இடங்கள் பா.ஜ.க. வுக்கு கிடைக்கும் எனக் கூறினார்கள். ஆனால் மைனாரிட்டி அரசு தான் அமையும் என நான் முன்பே தெரிவித்தேன். அதேபோல் 240 இடங்கள் தான் பா.ஜ.க.வுக்கு கிடைத்தது.2021 நடந்த சட்டமன்றத் தேர்தலில் 5 மாநில முதலமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்து கருத்து கணிப்பு எடுத்துள்ளனர். தமிழ்நாட்டை பொறுத்தவரை கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆட்சி சிறப்பு என்பதாகும். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலும் நாம் கடினமாக உழைத்து முழு வெற்றியைப் பெற வேண்டும். உழைக்கக்கூடிய அனைவருக்கும் கட்சியில் அங்கீகாரம் கிடைக்கும்.

இவ்வாறு கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி பேசினார்.

முன்னதாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவ சிலைக்கு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர் கள் சூர்யா வெற்றிகொண்டான், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடிஅருணா,மாநில விவசாய அணி இணை செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர்,கு.செல்லப்பா,

ஒன்றிய செயலாளர்கள் செல்லத்துரை, அன்பழகன்,சிவன்பாண்டியன், ரவிசங்கர், மாரிவண்ணமுத்து, மகேஷ் மாயவன், ஜெயக்குமார், சீனித்துரை, திவான்ஒலி, சுரேஷ், நகர செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், கணேசன், பேரூர் கழக செயலாளர்கள் அழகேசன், முத்தையா, ராஜராஜன், வெள்ளத்துரை, பண்டாரம், சங்கர், சுடலை, முத்து, நெல்சன், லெட்சுமணன், கோபால், சிதம்பரம்,தங்கப்பா என்ற முகமது உசேன்,ஜெகதீசன், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பண் ஹபீபுர் ரகுமான்,ஆலடி எழில்வாணன்,மகளிர் அணி நிர்வாகிகள் திவ்யா மணிகண்டன், பேபி ரசப்பாத்திமா, வைத்தீஸ்வரி,மல்லிகா, சுசீலா, சரஸ்வதி, சுந்தரி, தருமச்செல்வி, கற்பக செல்வி,மாரியம்மாள்,சாலி மேரி, ஹபீப்நிஷா, பாண்டிராணி, பானு ஷமீம், ராஜேஸ்வரி, சபர்நிஷா, விமலா ராணி,

சிவசண்முகஞானலட்சுமி, சமுத்திரக்கனி, சாந்தி, ஐவேந்திரன் தினேஷ், ராமராஜன்,முகமது ரஹீம், கிருஷ்ணராஜ், சங்கீதா சுதாகர், டாக்டர் அன்பரசன், இசக்கிபாண்டியன், கோமதிநாயகம்,வளன்அரசு, முத்துக்குமார்,கழகப் பேச்சாளர்கள் இஸ்மாயில்,வேங்கை சந்திரசேகர், உள்பட சுரண்டை நகர கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புக்கள், பொது மக்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் பொதுக்குழு உறுப்பினர் ஏ.பி.அருள் நன்றியுரை யாற்றுகிறார்.

மக்களவைத் தேர்தலில் உழைத்த மாவட்ட அவைத்தலைவர் சுந்தர மகாலிங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, மாவட்ட பொருளாளர் ஷெரிப்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, முத்துப்பாண்டி, சேசு ராஜன், சேக்தாவுது, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், ராஜேஸ்வரன், சமுத்திர பாண்டியன், கதிர்வேல் முருகன், சாமிதுரை, தமிழ்ச்செல்வி, ரவிச்சந்திரன், 11ஒன்றிய செயலாளர்கள்,4,நகர செயலாளர்கள், 14 பேரூர் செயலாளர்கள் உள்பட 51 பேருக்கு கைபேசிகளும்,கேடயமும் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் 32 பேர்கள் உட்பட ஆக மொத்தம் 117 பேர்களுக்கு கேடயம் பரிசாக கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கி பாராட்டினார்.

இதற்கான ஏற்பாடுகளை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் செய்திருந்தார்.

### அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமை! சிவகங்கை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்

# திருமதி பவானி கணேசன் மகள் திருமணம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்திவைத்தார்!

சிவகங்கை, செப். 11 - சிவகங்கை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் அரிமா மு.செ.கணேசன் மகள் மு.செ.க.எழில்நிலா பெரம்பலூர் தாலுகா பசும்பலூர் ரா. பிச்சபிள்ளை திருமதி பி.விஜயா ஆகியோரின் மகன்பி. ரோகித்ராஜ் ஆகியோரது திருமணம் சிவகங்கை தாலுகா ஒக்கூர் அண்ணா நகரில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் சட்டத்துறை அமைச்சர் அமைச்சர் எஸ். ரகுபதி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ. மாநில மகளிரணி செயலாளர் திருமதி ஹெலன்டேவிட் சன் ,மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி நாமக்கல் ராணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

திருமணத்தினை கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி பேசினார்.

முன்னதாக மணமக்கள் இருவரும் திருமணத்திற்கான உறுதிமொழி பத்திரத்தினை கனிமொழி கருணாநிதி முன்பாகவாசித்து உறுதிமொழி ஏற்று கொண்டு கையெழுத்திட்டார்கள். சுயமரியாதை முறைப்படி திருமணம் நடைபெற்றது. முன்னதாக திருமதி பவானி கணேசன் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. துணைமேயர் என். குணசேகரன், சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம் மா. ஜெயராமன், மாநில மகளிர் துணைச் செயலாளர்திரு மதி பவானி ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் இ.எம். சுதர்சன நாச்சியப்பன், முன்னாள் எம்.எல்.ஏ .சுப. மதியரசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி பா.செந்தில் குமார், மாநில ஊடகத் துறை இணைச் செயலாளர் கவிஞர் சல்மா, செயற்குழு உறுப்பினர். தா. ராமையா, மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் மருத்துவர்.ப.மீ. யாழினி,

மாநில பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் சுஜாதா, மகளிரணி நிர்வாகிகள் மு.மணிமேகலை, மார்க்ரெட்கமலா, திலகவதி கண்ணன் , தெரசா, ராஜேஸ்வரி சேகர், காஞ்சனா, குணசேகரன் அரசு வழக்கறிஞர்கள் துஷாந்த் பிரதீப்குமார், எஸ்.சேது. காமேஸ்வரன் , திராவிட கழக பொதுக்குழு உறுப்பினர் மணிமேகலை சுப்பையா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி ,ஒன்றிய கழகச் செயலாளர் கடம்ப சாமி, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் மற்றும் அனைத்து கட்சி நிர்வாகிகள் கிராம பொது மக்கள் கலந்து கொண்டனர்.

மு.செ.க.எழில் மாறன் நன்றி கூறினார்.

### சிவகங்கை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் ஜோன்ஸ் ரூசோ–

# பொதுக்குழு உறுப்பினர் ஆதி.கண்ணாத்தாள் இல்ல மணவிழாக்கள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையேற்று நடத்திவைத்தார்!

சிவகங்கை, செப். 11 - சிவகங்கை மாவட்டகழக துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ மகன் திரைப்பட நடிகர் ஆர்.நிஷாந்த்ரூசோவிற்கும் சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா கல்லடிதிடல் எல்.எட்வர்டு ஜோசப் திருமதி மஞ்சுளா மேரி ஆகியோரின் புதல்வி இ. சினேகா கேத்தரின் ஆகியோரது திருமணம் காரைக்குடி பி.எல்.பி. பேலஸ் மகாலில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், கூட்டுற வுத் துறை அமைச்சருமான கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக அனைவரையும் மாவட்டக் கழக துணைச்செயலாளர் திருமதி ஆர்.ஜோன்ஸ் ரூசோ வரவேற்றுப் பேசினார். அமைச்சர்கள் எஸ். ரகுபதி, சிவ.வீ. மெய்யநாதன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி மணிமேகலை தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மணமக்களை காரைக்குடி மாநகராட்சி மேயர் எஸ்.முத்துதுரை, துணை மேயர் என்.குணசேகன் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. முன்னாள் எம்.எல்.ஏ சுப.மதியரசன், திருமதி லீமா ரோஸ்மார்ட்டின், பார்க்கவசங்க மாநில இணைச் செயலாளர்எஸ். சீனிவாசன் புனித மைக்கேல் கல்லூரி தாளாளர் எம். ஸ்டாலின்ஆரோக்கிய ராஜ், எஸ்.விஸ்வ நாதன்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். நாகனி ப. செந்தில் குமார், மாநில தணிக்கை குழு உறுப்பினர்ஏ. ஆர்.வி. காசி நாதன், நகர்கழக செயலாளர் பெரி.பாலா ஒன்றிய கழக செயலாளர்கள் லெ.மு. ரவிச்சந் திரன், பூபால சிங்கம், நாகனிரவி பொதுக் குழு உறுப்பினர்கள். பள்ளத்தூர் கே.எஸ்.ரவி,ஜெ. மதார்சேட் மகளிர் அணி நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, தெரசா, காஞ்சனா, தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன் முன்னாள் மாவட்ட இளைஞரணி. அமைப்பாளர். சீ.ரவி உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அனைத்துக் கட்சியினர் வாழ்த்தினார்கள்.

திருமண விழா ஏற்பாடுகளை திருமதி ஆர். ஜோன்ஸ் ரூசோ, மருமகன் ராஜாஸ்டீபன், திருமதி ஆர். ஜெம்மநிபிலா இலக்கிய அணி பொருளாளர் க.அழகையா ஆகியோர் செய்திருந்தார்கள்.

**ஆதி.கண்ணாத்தாள் இல்ல மணவிழா!**

பொதுக்குழு உறுப்பினர் ஆதி. கண்ணாத்தாள் சோம.ஆதி. ஆதியான் செட்டியார் மகன் ஆதி. இராமசாமிக்கும் ஓ.புதூர் கோவை பெ.அ.நா. அன்பு நாதன் செட்டியார் சீதா ஆச்சி மகள் அ.சுவேதா ஆகியோரது திருமணம் காரைக்குடி சுபலட்சுமி மகாலில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமை ஏற்று திருமணத்தை நடத்தி வைத்தார்.

அமைச்சர்கள் எஸ். ரகுபதி, சிவ.வீ. மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் திருமதி தமிழரசிரவிக் குமார் எம்.எல்.ஏ. முன்னாள் எம். எல். ஏ.கரி. ராமசாமி, மேயர் எஸ். முத்துதுரை, துணைமேயர் என். குணசேகரன், திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், கார்த்தி ப. சிதம்பரம் எம்.பி. பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி. ஒன்றிய கழக செயலாளர்கள் பூபாலசிங்கம், சுப.சின்னதுரை, கே.ஆர்.ஆனந்த், முன்னாள் எம்.எல் ஏ. சுப. மதியரசன் உட்பட ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் அனைத்துக் கட்சி பிரமுகர்கள் வாழ்த்தினார்கள்.

திருமண விழா ஏற்பாடுகளை பொதுக்குழு உறுப்பினர் ஆதி. கண்ணாத்தாள் ஆதி .ராஜ் கணேஷ் தேவி ஆகியோர் செய்திருந்தார்கள்.



நெல்லை கிழக்கு மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் நகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஸ்ரீ நாராயணகுரு திருமண மண்டபத்தில் நகர அவை தலைவர் அதியமான் தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் கணேசன் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். உடன் மாநில தேர்தல் பணி செயலாளர் ராஜமன்னார், மாநில அணி துணை செயலாளர்கள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட பிரதிநிதிகள் இசக்கி பாண்டியன், பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே. கே.சி.பிரபாகரன், மாவட்ட துணை செயலாளர் மாஞ்சோலை மைக்கேல், அம்பை ஒன்றிய செயலாளர் பரணி சேகர், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, வக்ஷ குமார், பொன்ராஜ், மாரியப்பன், ஜெயப்பிரகாஷ், சங்கரநாராயணன், வாசு ஜெயராம்,ஜெயராஜ், நகர பொருளாளர் ரவி உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் , மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கும் விழாவினை துவக்கி வைத்தார்.இதனை தொடர்ந்து இராமநாதபுரத்தில் தனியார் மகாலில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடை பெற்றது.இதில், 598 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 47.33 கோடி மதிப்பிலான வங்கி கடனை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் , இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. வழங்கினார்கள். இதன் பின்னர் 7.23 கோடி மதிப்பிட்டில் முடிவுற்ற 44 பணிகளை திறந்து வைத்தார்கள் இந்த நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மக்களவை உறுப்பினர் கே நவாஸ் கனி, பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ முருகேசன், திருவாடானை சட்ட பேரவை உறுப்பினர் கரு.மாணிக்கம். மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திசைவீரன், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய தலைவர் பிரபாகரன், நகர் மன்ற தலைவர் ஆர் கே கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.